சி. சுப்பிரமணியம் நினைவு நாள்

குடியரசு துணைத் தலைவர் அஞ்சலி



விடுதலைப் போராட்ட வீரர் சி. சுப்பிரமணியத்தின் நினைவுநாளையொட்டி தில்லியில் உள்ள தனது மாளிகையில் அவரது உருவப் படத்திற்கு சனிக்கிழமை மலர் தூவி அஞ்சலி செலுத்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

நமது நிருபர்

புது தில்லி, நவ.7: சுதந்திரப் போராட்ட வீரர் சி.சுப்பிரமணியம் நினைவுநாளில் அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

இது குறித்து தனது 'எக்ஸ்' தளத்தில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: 'பாரத ரத்னா' சி. சுப்பிரமணியத்தின் நினைவுநாளில், குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் அவரது உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினேன்.

சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்த அவர், சுதந்திரத்திற்குப் பிறகு தமிழக அரசிலும் மத்திய அரசிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்து, சிறப்பான நிர்வாகப் பங்களிப்பை வழங்கினார். மத்திய அமைச்சராகவும், மகாராஷ்டிர ஆளுநராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

தியாகம், தூய்மை, தேசபக்தி ஆகிய உயரிய பண்புகளை அடிப்படையாகக்கொண்டு தனது நீண்டநெடிய பொதுவாழ்வை அர்ப்பணித்தவர் சி.எஸ். இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கும் வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்டதில் அவரது பங்களிப்பு மகத்தானது. அவரது தொலைநோக்குப் பார்வையும் முயற்சிகளும் இந்தியாவின் உணவுப் பாதுகாப்புக்கும், பால் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா உயர்வதற்கும் வலுவான அடித்தளமிட்டன. அவரது நினைவு நாளில், தேசத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து, அவருக்குப் புகழஞ்சலி செலுத்துவதில் பெருமை கொள்கிறேன் என அப்பதிவில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க எஸ்ஐஆர் தீர்ப்பாயம்: 4-ஆவது ஓய்வுபெற்ற நீதிபதி ராஜிநாமா

கொல்கத்தா, நவ.7: மேற்கு வங்க வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) தீர்ப்பாயங்களில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக, ஓய்வுபெற்ற கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி விஸ்வஜித் பாசு ராஜிநாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த தீர்ப்பாயங்களுக்குத் தலைவர்களாக 19 ஓய்வுபெற்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்ட நிலையில், ஏற்கெனவே கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.எஸ்.சிவஞானம், ஓய்வுபெற்ற நீதிபதிகள் ரஞ்சித் குமார் பாக், இந்திரஜீத் சாட்டர்ஜி ஆகியோர் ராஜிநாமா செய்தனர். தற்போது 4-ஆவதாக விஸ்வஜீத் பாசு ராஜிநாமா செய்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆரின்போது வாக்காளர் விவரங்களில் முரண்பாடுகள் உள்பட பல்வேறு காரணங்களால் சுமார் 91 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். இது குறித்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்கி, அந்த மாநிலத்தில் 19 எஸ்ஐஆர் மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களை தேர்தல் ஆணையம் அமைத்தது. இந்தத் தீர்ப்பாயங்கள் நீக்கப்பட்ட வாக்காளர்களின் மேல்முறையீடுகளை விசாரித்து வருகிறது.

ஐ.நா. நிர்வாகம், நிதி விவகார ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்திய அதிகாரி தேர்வு

நியூயார்க், நவ.7: ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபையின் நிர்வாகம் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராக (2027-29 கால கட்டம்) இந்திய பெண் அதிகாரி ஷிவானி குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வரும் 2027-ஆம் ஆண்டு ஜனவரி முதல் மூன்று ஆண்டு கால இந்த உறுப்பினர் பதவிக்கு ஷிவானி குப்தாவை தேர்வு செய்ய ஆதரவு தெரிவித்த ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு, ஐ.நா.வுக்கான இந்திய நிரந்தர தூதர் நன்றி தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் சபையின் துணை அமைப்பான 'நிர்வாகம் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆலோசனைக் குழு' என்பது, பொதுச் சபையால் தனிப்பட்ட தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து நியமிக்கப்பட்ட 21 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

ஐ.நா. சபையின் உலகளாவிய பணிகளுக்கு உறுப்பு நாடுகள் வழங்கும் பங்களிப்புகளை பொறுப்புடனும் திறமையுடனும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, பல்வேறு புவியியல் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த உறுப்பினர்கள் மூன்றாண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் வரவு-செலவுத் திட்ட விவகாரங்கள் மற்றும் வளங்கள் தொடர்பான முன்மொழிவுகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்கள்.

நூற்றாண்டு நாயகர் பாரத ரத்னா எல்.கே. அத்வானி

பிரதமர் நரேந்திர மோடி



எல்.கே. அத்வானி என்கிற லால் கிருஷ்ண அத்வானி ஞாயிற்றுக்கிழமை (நவ.8) தனது நூறாவது வயதில் அடியெடுத்து வைக்கிறார். நவீன இந்தியாவின் வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில், வெகு சில ஆளுமைகள்தான் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

அத்வானி, 1927 நவம்பர் 8-ஆம் தேதி கராச்சியில் பிறந்தார். 1947-ஆம் ஆண்டு, தமது இளம் வயதில், சிந்துவில் தனக்குப் பழக்கமான வாழ்விடத்தையும் சூழலையும் விட்டுப் பிரிய வேண்டிய வேதனையை அவர் அனுபவித்தார். இருப்பினும், எவ்விதக் கசப்புணர்வும் இன்றி, பூஜ்ஜியத்திலிருந்து தனது வாழ்க்கையை மீண்டும் கட்டமைத்துக் கொண்டார்.

எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு, அடிப்படையிலிருந்து ஒன்றை உருவாக்கும் இந்தப் பண்பு, அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வெளிப்பட்டு வந்துள்ளது. ஜன சங்கத்தை வலுப்படுத்தியபோதும், பின்னர் பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கி வளர்த்தபோதும் இந்தப் பண்பு வெளிப்பட்டது.

அத்வானியை ஒரு தனித்துவமான தலைவராக, எப்போதும் அவரின் இரண்டு பண்புகள் அடையாளப்படுத்துகின்றன. முதலாவது, அவரது கொள்கைத் தெளிவும், அறிவுக்கூர்மையும்; அவரின் எழுத்துகளிலும், உரைகளிலும் இந்தப் பண்புகள் வெளிப்பட்டன. இரண்டாவது, இந்திய அரசியல் களத்தின் பெரும்பான்மையான பிரிவினரால் பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போலி மதச்சார்பின்மையை அவர் அம்பலப்படுத்திய விதம்.

தனக்கு ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கவனத்துடனும் அவர் நிறைவேற்றினார். ஆர்எஸ்எஸ் தொண்டராக தனது பணியைத் தொடங்கிய அவர், முதலில் ராஜஸ்தானின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றினார்.

அங்கிருந்து தலைநகர் தில்லிக்குச் சென்ற அவர், மூத்த தலைவர் வாஜ்பாயுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றத் தொடங்கினார். இருவரும் இணைந்து இந்திய அரசியலின் போக்கையே மாற்றி அமைத்தனர்.

அத்வானியின் நாடாளுமன்றப் பயணம் 1970-ஆம் ஆண்டில் தொடங்கியது. நாடாளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரைகளும் முன்வைத்த கருத்துகளும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களின் பாராட்டைப் பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் எதிர்க்கட்சித் தலைவராகவும், ஆளுங்கட்சி உறுப்பினராகவும் அவர் தனித்துவமான முத்திரையைப் பதித்தார்.

அத்வானியின் வாழ்க்கையில் அவசரநிலைக் காலம் (1975-ஆம் ஆண்டு), ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. ஜனநாயகத்தைக் காப்பதிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதிலும் அவர் முன்னிலை வகித்தார். அவசரநிலைக் காலத்தில் அவர் பெற்ற அனுபவங்கள், 'ஒரு கைதியின் குறிப்பேடு' என்ற அவரது நூலில் இடம்பெற்றுள்ளன.

அத்வானி சிறந்த எதிர்க்கட்சித் தலைவராகவும், நிர்வாகியாகவும் விளங்கினார்.

1977-ஆம் ஆண்டு பிரதமர் மொரார்ஜி தலைமையில் ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பேற்ற போது, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சராக அத்வானி பொறுப்பேற்றார்; அதில் அவர் ஆற்றிய பணிகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பணியாற்றி, நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் அவர் முக்கியப் பங்காற்றினார். பயங்கரவாதத்துக்கு எதிராக அவர் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்டதன் விளைவாக, இந்தியாவில் கடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்வானியின் வாழ்க்கையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகளில் ஒன்று, சோமநாதர் ஆலயத்திலிருந்து அயோத்தி வரை நடைபெற்ற ரத யாத்திரையாகும்.

இது, இந்தியச் சமூகத்தின் போக்கில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியது. பல ஆண்டுகளுக்குப் பின், இந்திய மக்களின் ஆசியுடன், அயோத்தியில் பகவான் ஸ்ரீராமருக்கு பிரம்மாண்டமான ஆலயம் எழுப்பப்பட்டது.

அத்வானியைக் கௌரவிக்கும் வகையில், 2024-ஆம் ஆண்டு அவருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது.

அத்வானி தனது 100-ஆவது வயதில் அடியெடுத்து வைக்கும் (நவ.8, 2026) இந்தச் சிறப்பான தருணத்தில், அவர் நல்ல உடல்நலத்துடன் நீண்ட காலம் வாழவும், எப்போதும்போல நம் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கவும் இறைவன் அவருக்கு அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

முதுபெரும் தலைவர் அத்வானியின் 100-ஆவது பிறந்தநாள்: சிறப்பு நிகழ்ச்சிக்கு பாஜக ஏற்பாடு

புது தில்லி, நவ.7: பாஜக முதுபெரும் தலைவர் எல்.கே.அத்வானியின் 100-ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், ஞாயிற்றுக்கிழமை சிறப்பு நிகழ்ச்சிக்கு பாஜக ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாஜகவின் மூத்த தலைவரும், முன்னாள் துணைப் பிரதமருமான பாரத ரத்னா விருது பெற்ற அத்வானியின் 100-ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அத்வானியின் ஊக்கமளிக்கும் வாழ்க்கை, நாட்டுக்கு அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க பணி, பாஜகவின் வளர்ச்சிக்கு அவர் அளித்த பங்களிப்பு, அவரின் நீண்டகாலப் பொது வாழ்க்கை பயணம் ஆகியவற்றை நினைவுகூரும் வகையில், பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் தலைமையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்வானியின் மகள் பிரதிபா அத்வானி, மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் உள்பட பாஜக மூத்த தலைவர்கள் பலர் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சியில் 1927-ஆம் ஆண்டு நவ.8-ஆம் தேதி பிறந்த அத்வானி, 99 வயதை நிறைவு செய்து 100-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்.

பாதுகாப்பு நிலைமை மிகவும் சிக்கலாக மாறியுள்ளது



பாக்டோக்ரா, நவ. 7: பாதுகாப்பு நிலவரம் மிகவும் சிக்கலாக மாறியுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேற்கு வங்க மாநிலம், பாக்டோக்ராவில் அமைந்துள்ள விமானப் படை தளத்தில் படை வீரர்களிடையே அவர் சனிக்கிழமை பேசியதாவது:

போர்முறை என்பது எல்லை தாண்டிய துப்பாக்கிச்சூடு என்பதையும் தாண்டி வந்துள்ளது. மறைமுகப் போர்கள், இணையவெளித் தாக்குதல்கள், ட்ரோன் தாக்குதல்கள், தகவல் நடவடிக்கைகள் போன்றவையும் போர்முறையாக மாறியுள்ளன. இதனால் பாதுகாப்பு நிலவரம் மிகவும் சிக்கலாக மாறியுள்ளது.

இன்று எதிரி நேரடி மோதலைத் தவிர்த்து, நமது பலவீனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு அதிகரித்துள்ளது. சமூக வலைதளங்கள் மூலம் உள்ளூர் மக்களிடையேயும், படை வீரர்களிடையேயும் தவறான தகவல்கள் மூலம் நமது எதிரி சந்தேக விதைகளைப் பரப்புவது வழக்கமாகி விட்டது.

இந்தச் சூழலில் ஒரு சாதாரண படைவீரரின் பணியாக உங்கள் பணி இருக்கப் போவதில்லை. உங்கள் விழிப்புணர்வு மூலம்தான் நாம் எதிரியின் எந்தவொரு சதித் திட்டத்தையும் முறியடிக்க முடியும்.

பாக்டோக்ரோ விமானப் படை தளத்துக்கு நான் வந்ததற்கு முக்கியக் காரணம் விமானப் படை வீரர்களுக்கு எனது தீபாவளி வாழ்த்துகளை நேரில் தெரிவிக்க வேண்டும் என்பதுதான். பண்டிகைக் காலங்களில் படை வீரர்களிடம் இருந்து பிரிந்து இருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிகைக் காலத்தில் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் நேரம் செலவிட முடியாமல் இருப்பதை நான் அறிவேன். எனினும் நீங்கள் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்தி, தேசத்தைக் காப்பதில் உங்களையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளீர்கள்.

உங்கள் தியாகத்தைப் போற்றுவதற்கு வார்த்தைகளே இல்லை என்றார் அவர்.

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

மின் ஏல விற்பனை அறிவிப்பு
அசையா சொத்துக்களுக்கானது.

சொத்து மீட்பு கிளை

எண்.168, இரண்டாவது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை - 600 001, போன்: 91375 54740
மின்னஞ்சல்: ubin0554740@unionbankofindia.bank.in

கடன்பட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது மானதினால், கீழே கையொப்பமிட்டுள்ளவர், யூனியன் பேங்க் ஆப் இந்தியா, அதிகாரியாக இருக்கிறபடியால், அடமானமாக வைக்கப்பட்டு, வங்கியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை, வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கித்தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிக்கும் பொருட்டு பின்னணி எவத்தில் விடப்படுகிறது. சொத்துக்களானது "உள்ள இடத்தில் உள்ளவாறு", 'உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும், மேலும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டெவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்.1: கடன்தாரர் & ஜாமீன்தாரர் பெயர்: 1) M/s. Selvalatha Industries-உரிமையாளர்: திரு.T. இராஜவேல், எண்.1, VOC நகர், விவேகானந்தா நகர், அய்யப்பாக்கம், சென்னை - 600 077. 2) திரு.T.ராஜாவேல் த/பெ. திரு.P.தர்மராஜ் (கடன்தாரர்) கதவு எண்.1, பாட்டாளி தெரு, அம்பேத்கர் தெருவிற்கு அருகில், VOC நகர், அய்யப்பாக்கம், சென்னை-600 077. 3) திருமதி R.செல்வலதா க/பெ. திரு. T.ராஜவேல் (ஜாமீன்தாரர்) கதவு எண்.1, பாட்டாளி தெரு, அம்பேத்கர் தெருவிற்கு அருகில், VOC நகர், அய்யப்பாக்கம், சென்னை 600 077.

நிலுவைதொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.18,18,66,685.74 மேலும் எதிர்கால வட்டி அதனுடன் இதர செலவீனங்கள்

விற்பனை செய்யப்படவுள்ள கடனீட்டு அசையாச் சொத்தின் விவரங்கள்: அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அப்பர்பாக்கம் கிராமத்தின், பழைய சர்வே எண்.7, பட்டாவின்படி சர்வே எண்.7-1A2 இல் அடங்கிய சென்னை – 600 077. அய்யப்பாக்கம், வ.உ.சி. நகர், பாட்டாளித் தெரு, மனை எண்.86,87,88 & 89, கதவு எண்.1 இல் அமைந்துள்ள திரு.T. இராஜவேல் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: 24அடி அகல சாலை (பாட்டாளித் தெரு), தெற்கில்: 24அடி அகல சாலை, கிழக்கில்: பூங்கா (காலி நிலம்), மேற்கில்: காலி நிலம் (மனை எண்.85 & 90).

குறைந்தபட்ச கேட்பு விலை ₹2,57,00,000/- | டெவணித் தொகை ₹25,70,000/- | ஏலவுயர்வுத்தொகை ₹3,00,000/- | சுவாதீனம் ஆக்கபூர்வ

வ.எண்.2 கடன்தாரர் & ஜாமீன்தாரர் பெயர்: 1) திருமதி. அனிதா வெங்கடேசன் New Care Printer Solutions எண். 25, VCT கேம்பர்ஸ் ஆதிபட்டன் தெரு, சென்னை 600 002 (2) திரு. பார்த்தசாரதி K, எண். 137/76, எல்லை அம்மன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033 (3) திருமதி அனிதா வெங்கடேசன் எண்.50/77, கோதை மெயின் ரோடு, பழனிய கோவில் தெரு, பாடி, சென்னை 600050 (4) திருமதி அனிதா வெங்கடேசன் பிளாட் எண்.15B & 16, பிளாட் G1, தரை தளம் கண்ணகி நகர் 1வது தெரு கொரட்டூர், சென்னை 600 080 (5) திருமதி அனிதா வெங்கடேசன் பிளாட் எண்.15B & 16, பிளாட் 1C, முதல் தளம் கண்ணகி நகர் 1வது தெரு கொரட்டூர், சென்னை 600 080

நிலுவை தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.45,91,757.84 + மேலும் வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவீனங்கள்

அசையாச் சொத்தின் விவரங்கள்: அட்டவணை A: மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் கிராமத்தின் சர்வே எண்.1167 இல் அடங்கிய கண்ணகி நகர் முதல் தெரு, மனை எண்.15B மற்றும்16 ஆகியவற்றின் விஸ்தீரணம் 2455சது.அடி நிலம் சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில் : 24அடி சாலை; தெற்கில் : சர்வே எண்.1160 இல் உள்ள நிலம்; கிழக்கில் : மனை எண்.17; மேற்கில் : மனை எண்.15A; நாற்புரம்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் : 42 அடி 6 அங்குலங்கள்; தென் புறம் : 42 அடி 6 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் : 55 அடி, மேற்கு புறம் : 60 அடி 6 அங்குலங்கள். அட்டவணை B: அட்டவணை A இல் குறிப்பிட்ட நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 415சது.அடி அட்டவணை C: அட்டவணை A இல் குறிப்பிட்டுள்ள முதல் தளத்தில் உள்ள ஃப்ளாட் எண்.1C 850சது.அடி சூப்பர் கட்டிடப்பரப்பு பொதுப்பரப்பு உட்பட அதனுடன் ஒரு மூடிய கார் நிறுத்தும் இடம்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹22,50,000/- | டெவணித் தொகை ₹2,25,000/- | ஏலவுயர்வுத்தொகை ₹50,000/- | சுவாதீனம் ஆக்கபூர்வ

வங்கிக்குத் தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்திற்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை
இருப்பினும், ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் வில்லங்க சான்றிதழினை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்)

மின் ஏல தேதி & நேரம்: 26.11.2026 | நேரம்: மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரை (முன 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்) | மின் ஏல இணையதளம்: https://BAANKNET.COM

விருப்பமுள்ள ஏலதாரர்கள் பதிவு மற்றும் கையேடு பற்றிய https://BAANKNET.com/ என்ற இணையதளத்தை பார்க்கவும் மற்றும் ஏதேனும் கேள்விகளுக்கு 8291220220 எண்களிலும் & மின்னஞ்சல்: support.BAANKNET@psballiance.com, கேட்டு கொள்ளவும்.. மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விவரங்களுக்கு https://www.unionbankofindia.co.in/auction-property/view-auction-property.aspx மற்றும் www.unionbankofindia.co.in. என்ற வலைதளத்தில் காணலாம். ஏலம் தொடர்பான சந்தேகங்களுக்கு யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, சென்னை- சொத்து மீட்பு கிளை, எண்.168, 2வது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை-600001, போன்: 9137554740 அல்லது ubin0554740@unionbankofindia.bank.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் நாட்கள் சட்டபூர்வமான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு.
மேற்குறிப்பிட்ட தேதியில் மின்-ஏல விற்பனை நடைபெறுவது குறித்து, பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8&9 இன் கீழ் இந்த அறிவிப்பானது கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் மேற்குறிப்பிட்ட கடன் தொகையினை செலுத்துவதற்கான அறிவிப்பாகவும் கருதப்படும்.

தேதி : 04.11.2026,
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

பேங்க் ஆப் பரோடா

பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்ப பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திரு ஜோதிலட்சுமி K, முகவரி எண்.4/98, 1 வது தளம், 3வது பிரதான சாலை, குமரன் நகர், சின்மையா நகர், கோயம்பேடு, சென்னை - 600078.

நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ. 56,50,196.96/- மேலும் 31.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். | சுவாதீனம் நிலை: மெம்நிலை

சொத்தின் விளக்கம்: அட்டவணை - A (மொத்த சொத்து) தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், எண்.8, அய்யஞ்சேரி கிராமம், கணபதி நகர், 5வது தெருவில் அமைந்துள்ள பழைய சர்வே எண். 35/2 பகுதி மற்றும் தற்போது சர்வே எண். 35/2A1A3 பகுதி இல் அடங்கிய நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. நாற்புரம்புகள்: கிழக்கு மேற்காக வடபுறம்- 74.4 மீட்டர்கள்; கிழக்கு மேற்காக தென்புறம் - 41 மீட்டர்கள்; வடக்குத் தெற்காக கிழக்குபுறம் 51.4 மீட்டர்கள்; வடக்குத் தெற்காக மேற்குபுறம் - 64 மீட்டர்கள்; கூட்டுப்பரப்பாவு மொத்தமாக 2835சதுர மீட்டர்கள் அல்லது 30515சதுர அடி (அதாவது 0.70 சென்ட்கள்) விஸ்தீரணங்கொண்ட நிலம். எல்லைகள்: வடக்கில்- சர்வே எண் 35/2A1A2 இல் உள்ள நிலம்; தெற்கில்- சர்வே எண் 89 இல் உள்ள நிலம் மற்றும் 30அடி சாலை; கிழக்கில்- சர்வே எண் 35/2A1A3 எஞ்சியுள்ள பாகம்; மேற்கில்- சர்வே எண் 87 இல் உள்ள நிலம்; அட்டவணை - B மேலே குறிப்பிடப்பட்ட சொத்து 30515சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 474சதுர அடி நிலம், அதில் கட்டப்பட்டுள்ள "Om Vignesha Castle" என்ற பெயரில் உள்ள பிளாக்-III கடடித்தில், பொதுக் கட்டிடப்பரப்புகளின் பங்கு உட்பட, நான்காம் தளத்தில் பரப்பளவு 1055சதுர அடி. கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண்.T1. Latitude: 12.859429 N, Longitude: 80.080334 E குறிப்பு: ஃப்ளாட் கட்டிமுடிக்கப்படாமல் உள்ளது.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 27,26,000/- | டெவணித் தொகை ₹ 2,72,600/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர்: திரு. கார்த்திகேயன். S முகவரி: எண்.4/98, முதல் தளம், 3வது பிரதான சாலை, குமரன் நகர், சின்மயா நகர், கோயம்பேடு, சென்னை - 600078.

நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ. 58,31,837.61/- மேலும் 31.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். | சுவாதீனம் நிலை: மெம்நிலை

சொத்தின் விளக்கம்: அட்டவணை - A (மொத்த சொத்து) தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், எண்.8, அய்யஞ்சேரி கிராமம், கணபதி நகர், 5வது தெருவில் அமைந்துள்ள பழைய சர்வே எண். 35/2 பகுதி மற்றும் தற்போது சர்வே எண். 35/2A1A3 பகுதி இல் அடங்கிய நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. நாற்புரம்புகள்: கிழக்கு மேற்காக வடபுறம்- 74.4 மீட்டர்கள்; கிழக்கு மேற்காக தென்புறம் - 41 மீட்டர்கள்; வடக்குத் தெற்காக கிழக்குபுறம் 51.4 மீட்டர்கள்; வடக்குத் தெற்காக மேற்குபுறம் - 64 மீட்டர்கள்; கூட்டுப்பரப்பாவு மொத்தமாக 2835சதுர மீட்டர்கள் அல்லது 30